**கெஸ்பாவ நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கெஸ்பாவ நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள கெஸ்பாவ நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய 4/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது நிறுவனத்திற்குச் சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் | நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய 4/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் 2020 இன் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் | சகல நிலையான சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நகர சபையினால் நூலக புத்தகங்கள், கணனி, கணனி மென்பொருள், சாலைகள் மற்றும் வீதிகள், இயந்திரங்கள், தளபாடங்கள் மற்றும் சில மோட்டார் வாகனங்கள் என்பன மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சாலைகள் மற்றும் வீதிகளுக்காக செலவிடப்பட்ட சபையின் உள்ளபடியான பெறுமதி மீள்மதிப்பீட்டு பெறுமதியாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | |
| (ஆ) | முதலீடு மீளப்பெறல் பெறுமதி ரூபா 35,288,875 ஆக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 69,284,456 ஆக காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 33,995,581 தொகை முதலீடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் அதிகரித்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். சரியாக நிலையான வைப்புக்கள் / (முதலீடு) மீளப்பெறல் - தேறிய பெறுமதி ரூபா 38,961,073 ஆக இருந்தமை பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தலின் பெறுமதி ரூபா 618,288,748 ஆக இருந்த போதிலும், அது ரூபா 602,055,211 ஆகும். அதனால் முதலீடுகளிலிருந்து உருவான பணம், காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் பெறுமதி ரூபா 16,233,537 தொகை குறைவடைந்திருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 128,280,347 தொகை இருதடவை பதிவில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் (19) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் ரூபா 127,943,235 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் சரியாக பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 127,943,235 தொகை உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நாட்குறிப்பின் அச்சிடல் வழுக்களை சரிசெய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மூலதன செலவின மானியமாக பணமாக கிடைத்த பெறுமதி ரூபா 211,634,900 ஆக இருந்த | உள்ளபடியாக பணமாக கிடைத்த மூலதன செலவினங்களின் தொகை ரூபா 211,634,900 ஆகும். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 109,002,052 ஆக காண்பிக்கப்பட்டமையினால் காசுப்பாய்ச்சல் கூற்றில் பணமாக உருவான காசு, காசு மற்றும் சமமானவைகளின் பெறுமதி ரூபா 102,632,848 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அதன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக இருக்கவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். | வேண்டும். |

## 2. நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 222,108,148 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 84,546,284 ஆகும்.

### 2.1 வருமான நிர்வாகம்

#### 2.1.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனவரி | | |
| | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 66,065,078 ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| | சபைக்குச் சொந்தமான நீண்டகாலமாக வாடகைக்கு வழங்கப்பட்ட 156 ஆதனங்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை மீதி ரூபா 2,909,875 ஆகும். | 28 ஆதனங்களில் நிலுவை மீதி ரூபா 565,960 தொகை அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |